# பதினேழாவது அத்தியாயம்

தத்துவம்-உபாயம்முதலியவற்றை வேதம், அதை அநுஸரித்த இதிஹாஸ புராணாதிகள் இவற்றைக் கொண்டே அறிய இயலும் என்பதை முன்
அத்தியாயத்தில் விவரித்தான் பகவான். சாஸ்திரம் கூறாதது ஆஸுரம். அதைச் செய்தால் விபரீத பலன் ஏற்படும். சாஸ்திரம் கூறிய கர்ம, ஸாத்துவிகம் ராஜஸம் தாமஸம் என்று மூன்று வகையாகப் பிரிந்துள்ளது. சாஸ்திரம் கூறிய கர்ம ஓம் தத் ஸத் இவற்றுடன் கூடியது அதாவது இந்த மூன்று சப்தங்களைச் சொல்லிக் கொண்டு சாஸ்திரீய கர்மாக்களைத் துவங்க வேண்டும் என்றபடி. இதுவே சாஸ்த்ரீய கர்மாவுக்கு லக்ஷணம் என்று இவை முதலான அர்த்தங்களை இந்த அத்தியாயத்தில் விவரிக்கிறான் பகவான்.

அர்ஜுனன்-கண்ணா! சாஸ்திரம் கூறாத யாகாதிகளைச் சிலர் சாஸ்திரம் கூறிய வழியைவிட்டுச் செய்கின்றனர். ஆனால் அவற்றை மிகுந்த ச்ரத்தையுடன் செய்கின்றனர். இவர்களின் நிலை எத்தகையது? நிலையிடம் ஸத்துவ குணமா? ரஜஸ் தமஸ் இவற்றில் ஏதாவது ஒன்றா?

கண்ணன்-அர்ஜுன! தேஹஸம்பந்தம் பெற்ற ஜீவர்களுக்கு ஸம்பவிக்கும் ச்ரத்தை மூவகையாகும். அவரவர்களின் ருசிக்குத் தக்கவாறு சிரத்தை ஸாத்துவிக ச்ரத்தை, ராஜஸ ச்ரத்தை, தாமஸ ச்ரத்தை என்று ஏறுபடுகிறது. அவரவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு சிரத்தை அமைகிறது. ஒவ்வொருவனும் சிரத்தைக்குத் தக்கவாறு மாறுபடுகிறான். அதாவது சிரத்தைக்குத் தக்கவாறு பலனைப் பெறுகிறான். எவனுக்கு எந்த மாதிரியானப் பலனைப் பெறுவதில் சிரத்தை ஸம்பவிக்கிறதோ அவன் அதற்கு அநுகூலமான பலனைப் பெறுகிறான்.

அர்ஜுன! ஸத்துவ குணம் மேலோங்கியுள்ளவர் தேவதைகளை ஆராதிப்பர். ரஜோகுணம் சற்றுத் தலையெடுத்திருக்கும் அவர்கள் யக்ஷர்களையும், அரக்கர்களையும் ஆராதிப்பர். தமோகுணம் சற்று விஞ்சியிருப்பவர் பிரேதங்களையும் பூதகணங்களயும் ஆராதிப்பர்.

எந்த ஜனங்கள் சாஸ்திரம் கூறாத பயங்கரமான தவம் முதலியவற்றை தம்மைத் தார்மிகராகத் தெரிவிக்கும் நோக்கத்துடனும், கர்வத்துடனும், விரும்பிய பொருளைப் பெறுவதற்கான பலத்துடனும், உடலில் இருக்கும் பஞ்ச பூதங்களையும் இளைக்கச் செய்கிறவராய், உடலில் ஹ்ருதயத்தில் இருக்கும் எனது அம்சமான ஜீவனையும் கஷ்டப்படுத்துகிறவராய், விவேகமின்றிச் செய்கின்றனரோ அவர்களை முன் சொன்ன ஆஸுரமான மன உறுதி பெற்றவர்களாக அறிவாயாக என்றான் பகவான்

சாஸ்த்ரோக்தமான கர்மாக்களில் சிரத்தை மூன்று வகை என்றும், இதை உடையவர்கள்
மூன்று வகையினர் என்றும், சிரத்தைக்குப் பாத்திரரான தேவாதிகளிலும் இம்மூவகைப் பிரிவு உண்டு என்பதும் ஆகிய பல விஷயங்களில் அடங்கியுள்ளன.

அர்ஜுன! இவ்வாறே ஆஹாரமும் மூன்று வகைப்படுகிறது. எல்லோருக்கும் அவரவர் குணத்திர்க்கேற்ப இஷ்டமான ஆஹாரமும்கூட மூன்று விதமாகும். அவ்வாறே யாகம், தவம், தானம் என்பவையும் மூன்று விதமாகும்.

ஆயுஸ், தெளிவான ஜ்ஞானம், பலம், ஆரோக்கியம், ஸுகம், ஸந்தோஷகரமான செயல் இவற்றை வளர்ப்பவனாகவும் இனிப்பவையாகவும், பசையுள்ளவனாகவும், வெகு நாள் நிற்கும் தாதுக்களாக மாறக்கூடியவையகவும், மனத்துக்குப் பிடித்தமானகவும் இருக்கும் ஆஹாரங்கள் ஸாத்துவிகர்களுக்குப் பிரியமானவை.

கைப்பாயும், புளிப்பாயும், மிக உப்பாயும், மிகச் சூடாயும், மிகக் காரமாயும், ஸ்நேஹம் அற்று வாதம் விளைவிப்பவனயாயும் எரிப்பவையாய்ப் பித்தம் விளைவிப்பனவும், துக்கம்-வருத்ததிற்குக் காரணமான செயலில் ஈடுபாடு நோய் இவற்றை உண்டு பண்ணுவனுமான ஆஹாரங்கள் ரஜோகுணம் உள்ளவனுக்குப் பிரியமானவை.

## பதினேழாவது அத்தியாயம்

உபயோகத்துக்கு உரிய காலம் கடந்ததும், சுவை இழந்த, துர்நாற்றம் கொண்டதும், வேறு சுவைப் பெற்றதும், எச்சிலானதும், பகவானுக்கு நிவேதனம் செய்யத் தகாததுமான ஆஹாரம் தமோ குணம் விஞ்சியவனுக்கு இஷ்டமாகும்.

இவ்வாறே யாகத்திலும் இந்தப் பிரிவுகள் உண்டு. எனக்கு ஏற்படும் பிரீதி தவிர வேறு பிரயோஜனத்தை எதிர்ப்பார்க்காமல் 'இது ஸ்வயம் பிரயோஜனம், அதாவது இதைச் செய்வதே புருஷார்த்தம்' என்ற எண்ணத்துடனும் உன்னிப்புடனும் சாஸ்திரம் கூறிய முறையில் செய்யப் பெறும் யாகம் ஸாத்துவிகம் ஆகும். டம்பத்துக்காகச் செய்யப்பட்டாலும் சாஸ்திரம் குறித்த பலனையும் விரும்பியே செய்யப்பெறும் யாகம் ராஜஸம். பெரியோர்களின் அநுமதியற்றதும், சாஸ்திர முறைப்படி ஆகாத திரவியங்கள் ஆனதும், ஏற்பட்ட மந்த்ரங்கள் அற்றதும், தக்ஷிணையிடாததும், சிரத்தையுடன் செய்யபடாததுமான யாகம் தாமஸம் என்ற பாகுபாட்டை அறிந்து கொள் என்றான் பகவான்.

அர்ஜுனன்–கிருஷ்ணா! 'யஜ்ஞ;தப;ததா தாநம்' என்று கீழே கூறிய மூன்றினுள் யஜ்ஞம் மூவகைப்பட்டது என்று விளக்கினாய். அவ்வாறே தபஸ், தானம் இவற்றிலும் பிரிவுகள் இருக்குமாயின் விளக்கியருள வேண்டும்.

கண்ணன்–அர்ஜுனா! நீ கேட்டவாறே தபஸ், தானம், இவையும் ஸத்துவாதி குணங்களால் மூன்று வகைப்படுகின்றன. முதலில் தபஸ் சரீரம், வாக்கு, மனம் ஆகிய மூன்று காரணங்களால் மூவகையாகிறது. தேவர், பிராம்மணர், ஆசார்யர், ப்ராஜ்ஞர் இவர்களை பூஜிப்பதும், புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது முதலியனவும், மனம் ஒத்த செயலும், பிற ஸ்திரீகளைக் காதலுடன்
பார்க்காமல் இருப்பது முதலியனவும், பிராணிகளை அடிப்பது முதலிய செயல்களால் ஹிம்ஸிக்காமல் இருப்பதும் உடலால் ஆகும் தவமாகச் சொல்லப்படுகிறது.

பிறருக்குப் பயம் முதலான எவ்விதத் தொந்தரவையும் உண்டு பண்ணாமலும் நடந்ததை நடந்தபடியும் இனிக்கும்படியும், நற்பயன் விளயும்படியும் பேசுவது, வேதங்களைச் சொல்வது முதலியன வாக்கு என்ற கருவியினால் ஆகும் தவம்.

மனத்தில் கோபம் முதலிய கலக்கமில்லாமை, பிறருடைய நன்மையப் பற்றிய சிந்தை, வீண் பேச்சை அடக்குவது, ஜீவாத்மா பரமாத்மா விஷயங்களில் மனத்தைச் செலுத்துதல் மற்ற விஷயங்களைப் பற்றி கவலையின்றி இருத்தல்–இவையே மானஸமான தபஸ் அதாவது மனத்தினால் செய்யும் தவம் ஆகும்

இந்த மூவகைத் தபஸ்ஸையும் பகவத்ப்ரீதி தவிர வேறு பலனைக் கருதாமல் 'இது பகவதாராதனம், இதனால் பகவானுக்கு ஸந்தோஷம் உண்டாக வேண்டும்' என்று நினைத்து, மிகுந்த ச்ரத்தையுடன் செய்தால் இது ஸாத்துவிகமான தபஸ் எனப்பெறும்

மதிப்பு–புகழ்ச்சி, பூஜை இவற்றுக்காகவும் பலனில் நோக்குடனும் தற்புகழ்ச்சியுடனும் செய்யப்படும் மூவகைத் தபஸ்ஸும் ராஜஸம் எனப்படும். இதனால் வரும் பலன் அழியும். இந்தப் பலன் போய்விடுமே என்ற பயமும் வாட்டும்

மூடர்களுக்கே உரியதான பிடிவாதத்தினால் தனக்கு உள்ள சக்தி முதலியவற்றைக் கணிசித்துப் பார்க்காமல், தன்னையும் வருத்திக்கொண்டு பிறரைத் தொலைப்பதற்காகச் செய்யும் தபஸ் தாமஸமாகும்

வேறு பலனைக் கருதாமல் கொடுப்பதையே பயனாகக் கருதி
நல்ல தேசத்தில் புண்ணிய காலத்தில் நமக்கு ஏற்கனவே உபகாரம் செய்யாத நல்ல பாத்திரத்திற்கு, அவனிடமிருந்து இனியும் எவ்வித ப்ரத்யுபகாரத்தை அபேக்ஷிக்காமல் கொடுப்பது ஸாத்துவிக தானம்.

கைம்மாறு எதிர்ப்பார்த்தும், செய்ததற்குப் பதிலாகவும், பலனைக் கருதியும் கெட்டுப் போன திரவியம் முதலியவற்றைக் கொண்டும் செய்யும் தானம்

## பதினேழாவது அத்தியாயம்

ராஜஸ தானம்.

தக்க தேசமும் காலமும் இராமல் இருக்க,ஸத்பாத்திரம் அல்லாதர்க்கு மரியாதை புரஸ்காரம் இன்றி அவமதிப்புடன் செய்யும் தானம் தாமஸம் ஆகும்

அர்ஜுன!வைதிகமான யஜ்ஞும்,தபஸ்,தானம் முதலியவை ஸத்துவாதி குணபேதத்தால் மூவகைப்படும் என்பதை உனக்கு நான் இவ்வளவாக விளக்கிச் சொன்னேன்.இனி வைதிக கர்மாக்களின் லக்ஷணம் சொல்லுகிறேன் கேள்.

ஓம்,தத்,ஸத் என்ற மூன்று விதமான சொல்லும் வேதத்துடன் ஸம்பந்தம் பெற்றதாகக் கருதப்படுகிறது.வேதம் ஓதுகிறவர்களும், வேதங்களும்,வைதிக க்ரியைகளும் இந்த மூன்று விதச் சொல்லுடன் ஸம்பந்தம் பெறும்படி என்னுல் ஏற்படுத்தப்பெற்றன.

வேதத்தில் அதிகாரம் பெற்றவர்களான மூவர்ணத்தாரும் வேதத்தில் கூறிய யாகாதிகளைச் செய்யும்போது எப்பொழுதும் ஓம் என்று முதலில் சொன்ன பிறகுதான் அவற்றைச் செய்கின்றனர்.

மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் வேறு பயனில் நோக்கின்றி,பலவிதமான யஜ்ஞும் தவம் இவற்றைச் செய்யும்பொழுதும்,தானம் செய்யும்பொழுதும் "தத்" என்ற சொல்லை முதலில் கூறி அவற்றைச் செய்கின்றனர்.

அர்ஜுன!உள்ளது என்ற பொருளிலும்,நல்லது என்ற பொருளிலும் "ஸத்" என்ற சொல் வழங்கப்பெற்று வருகிறது.உலகில் ஒருவன் செய்யும் லௌகிகமான செயல் மங்களகரமாக இருந்தால் அதை "ஸத் கர்ம–நல்ல செயல்" என்று வ்யவஹரிக்கின்றனர்.

வைதிகர்களான மூவர்ணத்தவர்க்கும் யஜ்ஞும்,தவம்,தானம் இவற்றில் இருப்பும் ஸத் என்று சொல்லப்பெறும்.மூவர்ணத்தவர்க்குப் பயனைப் பெறுவிப்பதற்கான கர்மமும் ஸத் என்றே சொல்லப் பெறும்.

மோக்ஷத்துக்காகச் செய்யப்படும் கர்மாக்களிலும் அநந்ய ப்ரயோஜனமாகச் செய்யப்படும் மற்றக் கர்மாக்களிலும் "ஸத்" என்று சொல்லக்கூடாது.

ச்ரத்தையின்றிச் செய்யும் ஹோமம்,தானம்,தவம் இவை "அஸத்" எனப்பெறுகின்றன. இவற்ருல் ப்ராக்ருதமான பலனோ மோக்ஷமோ கிடையாது

பதினேழாம் அத்தியாயம் முற்றும்